கா.பொ.த. உயர்தரம் புதிய பாடத்திட்டம் - 2017

அரசியல் விஞ்ஞானம்

ஐக்கிய அமேரிக்க அரசியலமைப்பு



தொகுப்பாக்கம்

R. அஹமட் அஹ்சன்

B.A (Hons) Special (R)

உள்ளடக்கம்

அமேரிக்காவின் அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்

அமேரிக்க சமஷ்டியின் பண்புகள்

அமேரிக்க சமஷ்டி முறையில் மத்திய மாநில அரசுகளுக்கிடையிலான தொடர்புகள்

அமேரிக்க மாநில அரசுகளுக்கிடையிலான தொடர்புகள்

அமேரிக்க காங்கிரஸின் அமைவுச்சேர்க்கை, அதிகாரங்கள், பணிகள்

அமேரிக்க ஜனாதிபதியின் தெரிவும் தேர்தல் கல்லூரியும்

அமேரிக்க ஜனாதிபதியின் அதிகாரங்களும

ஐக்கிய அமேரிக்க அரசியலமைப்பின் சிறப்பியல்புகள்

1. எழுதப்பட்ட நெகிழா அரசியலமைப்பு.

ஐக்கிய அமேரிக்க அரசியலமைப்பானது சுருக்கமான அரசியலமைப்பாக காணப்படுகின்றது. இது ஒரு முகவுரையையும் 07 அத்தியாயங்களையும் 4000 சொற்களையும் கொண்டுள்ளது. 229 வருடங்கள் பழமைமிக்க இவ் அரசியலமைப்பில் இதுவரைக்கும் 27 அரசியல் யாப்பு சீர்திருத்தங்கள் மட்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதே போன்று இது நெகிழா யாப்பாகவும் கருதப்படுகின்றது. இதன்படி யாப்பினை திருத்துவது கடினமானதும் சிக்கலானதுமாகும். அரசியலமைப்பிற்கு கொண்டு வரும் எந்தவொரு திருத்தத்திற்கும் அரசுகளின் ¾ பெரும்பான்மை அவசியமாகும்

2. சமஷ்டி அரசியலமைப்பு

அமேரிக்காவின் பல்வகைமையின் ஊடாக சுயாதீனத்தை கட்டியெழுப்புவதற்கான முயற்சியின் விளைவாக 13 சுதந்திரமான அரசுகள் ஒன்றிணைந்து உலகிற்களித்த கொடையே அமேரிக்க அரசியலமைப்பாகும். இது 13 அரசுகளில் ஆரம்பித்து தற்போது 50 மாநிலங்கள் வரை பரந்துள்ளது.

3. வலுவேறாக்கம் மற்றும் தடைகள் சமன்பாடுகள் கொண்ட யாப்பு

அமேரிக்க அரசியலமைப்பு வலுவேறாக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. இங்கு சட்டத்துறை நிர்வாகத்துறை, நீதித்துறை என்பன தனித்தனித்துறைகளாக இயங்கி வருகின்றன. அதேபோன்று தடைகள் சமன்பாடுகள் தத்துவமும் இவ்யாப்பில் உள்வாங்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு துறை ஏனைய துறையின் மீது அநாவசியமாக தலையிடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. கொடூரமான தான்றோன்றித்தனமான ஆட்சி ஏற்படுவதனை தடுப்பதே இவ் தடைகள் சமன்பாடுகள் தத்துவத்தின் நோக்கமாகும்.

4. மரபுகள், வழக்காறுகள், சம்பிரதாயங்களை கொண்ட யாப்பு.

அமேரிக்க அரசியலமைப்பானது சுருங்கிய ஒன்றாகும். இதன் மூலம் அரசாங்கமைப்பின் புறவமைப்பு காட்டப்பட்டுள்ளது. இந்த புறவமைப்பிற்குரிய எழும்பு, தசை, நரம்பு என்பன மரபுகள், வழக்காறுகள், சம்பிரதாயங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன.

5. நீதிப்புணராய்வு அதிகாரம் கொண்ட யாப்பு

அரசியலமைப்பினை பொருள்கோடல் செய்வதன் ஊடாக காங்கிரஸ் நிறைவேற்றும் சட்டங்கள் அரசியலமைப்பிற்கு உகந்ததா என்பதை மீளாய்வு செய்யும் அதிகாரத்தை நீதிமன்றங்கள் பெற்றுள்ளன. எனினும் இவ்வதிகாரத்தை அரசியலமைப்பினூடாக நீதிமன்றத்திற்கு நேரடியாக பெற்றுக்கொடுக்காவிடினும் அவ்வதிகாரம் மறைமுகமாக நீதிமன்றத்திற்கு உண்டு என்பதை 1803 ம் ஆண்டு மார்பரி எதிர்பரி மெடிசின் வழக்கு தீர்மானித்தது.

6. மக்கள் இறைமை தத்துவத்தை கொண்ட யாப்பு

அமேரிக்க அரசியலமைப்பானது மக்கள் இறைமை எனும் தத்துவத்தின் அடிப்படையில் அமையப்பெற்றுள்ளது. ஆட்சி செய்யும் அதிகாரம் மக்களிடம் காணப்படுகின்றது என்பதே இதன் கருத்தாகும்

7. குடியரசு யாப்பு

அமேரிக்க ஒரு குடியரசாகும். இதன் தலைவர் ஜனாதிபதியாவார். இவர் மக்களால் நேரடியாகவன்றி தேர்வாளர் கழகத்தினூடாக தெரிவு செய்யப்படுகின்றார். தேர்வாளர் கழக உறுப்பினர்கள் 538 பேறும் மக்கள் தேர்தல் மூலமே தெரிவாகின்றனர். அமேரிக்க அரசியலமைப்பானது மக்களிடமே இருந்து அதிகாரத்தை பெறுகின்றது. மேலும் அனைத்து அரசுகளும் தமது அரசியல்யாப்பினை குடியரசு தத்துவத்திற்கேற்ப ஒழுங்கமைத்துள்ளன.

8. ஜனாதிபதி ஆட்சிமுறையை கொண்ட யாப்பு

அமேரிக்க அரசியலமைப்பு ஜனாதிபதி ஆட்சிமுறை தத்துவத்தினை கொண்டுள்ளது. இதன்படி நிறைவேற்றுத்துறைக்கு பொறுப்பாக ஜனாதிபதியும் மற்றும் அவர்களது ஆலோசகர்களுமான கபினட் செயலாளர்களும் காணப்படுகின்றனர். ஜனாதிபதிற்கு அதிகாரங்கள் அரசியலமைப்பு மூலமும், உயர்நீதிமன்றத்தீர்ப்பின் மூலமும், காங்கிரஸினால் அங்கீகரிக்கப்பட்ட யோசனைகள் மூலமும் கிடைக்கின்றன.

9. இரட்டைக்குடியுரிமை

அமேரிக்க அரசியலமைப்பு இரட்டைக் குடியுரிமையினை அங்கீகரித்துள்ளது. இதன்படி நாட்டுக்குடியுரிமையும் அரசின் குடியுரிமையும் ஒருவருக்கு இருப்பது இரட்டைக்குடியுரிமையாகும். அமேரிக்க பிரஜை ஒருவர் ஐக்கிய அமேரிக்காவினதும் தான் வாழும் பிரசேத்தினதும் பிரஜையாகவும் உள்ளார்.

10. உரிமைகள் சாசனம்

அடிப்படை உரிமைகள், சொத்துக்கள் மற்றும் சுதந்திரத்தை பாதுகாக்கும் பொருட்டு இது உள்ளடக்கப்பட்டுள்ளது.

அமேரிக்க சமஷ்டிமுறையின் பண்புகள்

1. அரசியலமைப்பு மேலாண்மைவாய்ந்ததாக காணப்படுதல்

அமரிக்க அரசியலமைப்பு மேலாண்மை வாய்ந்ததாகும். அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள வழிமுறைகளுக்கும் விதிமுறைகளுக்கும் ஏற்ப மத்திய அரசும் மாநில அரசுகளும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். இதனை மீறி செயற்பட முடியாது. மேலும் அரசியல் யாப்பினை மீறுகின்ற சட்டங்களையும் நிறைவேற்றுத்துறை தீர்மானங்களையும் அரசியல் யாப்புக்கு முரணானது எனக்கூறி அதனை தடை செய்யும் நீதிப்புணராய்வு அதிகாரத்தை அமேரிக்க உயர்நீதிமன்றம் கொண்டுள்ளது.

2. எழுதப்பட்ட நெகிழா அரசியலமைப்பு

அமேரிக்க அரசியலமைப்பு சுருக்கமானதாகும். இது ஒரு முகவுரையையும் 07 அத்தியாயங்களையும் 4000 சொற்களையும் கொண்டுள்ளது. 229 வருடங்கள் பழமைமிக்க இவ்யாப்பில் இது வரைக்கும் 27 சீர்திருத்தங்கள் மட்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதேபோன்று நெகிழா அரசியமைப்பாகவும் காணப்படுகின்றது. இதன்படி அரசியலமைப்பை திருத்துவது கடினமானதும் சிக்கலான ஒன்றுமாகும். அரசியலமைப்பிற்கு கொண்டு வரப்படும் எந்தவொரு திருத்தத்திற்கும் அரசுகளின் ¾ பெரும்பான்மை அவசியமாகும்.

3. யாப்பு ரீதியான அதிகாரப் பங்கீடு

அமேரிக்க அரசியல் யாப்பில் அதிகாரங்கள் யாப்பு ரீதியாக பங்கிடப்பட்டுள்ளன. இதன் படி மத்திய அரசாங்கத்திற்கு சில அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய அதிகாரங்கள் மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பலவீனமான மத்திய அரசும் பலமான மாநில அரசுகளும் உருவாகியுள்ளது. அரசியல் யாப்பின் மூலம் மத்திய அரசுகளுக்கு குறித்தொதுக்கப்படாத சகல அதிகாரங்களையும் அரசுகளுக்கு வழங்கியுள்ளமை அமேரிக்க சமஷ்டியின் பிரதான பண்பாகும். இதன்படி சில அதிகாரங்கள் :

மத்திய அரசக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள்

- ✓ வெளியுறவு அதிகாரங்கள்
- ✓ நாணய வெளியீட்டு இஅதிகாரங்கள்
- ✓ தேசிய பாதுகாப்பு , போர்ப்பிரகடன அதிகாரங்கள்
- ✓ வரி அறவிடல், செலவு செய்தல் அதிகாரங்கள்
- ✓ சர்வதேச, மாநிலங்களுக்கிடையிலான வரத்தக அதிகாரங்கள்
- ✓ இராணுவ விவகாரம், அரசியல் யாப்பு திருத்தம் தொடர்பான அதிகாரங்கள்.

மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள்.

- ✓ உள்ளூராட்சி மன்ற அதிகாரங்கள்
- ✓ விவசாய மற்றும் வேளாண்மை தொடர்பான அதிகாரங்கள்
- ✓ குடியுரிமையுடன் தொடர்பான பாதுகாப்பு அதிகாரங்கள்
- ✓ ஆரம்ப கல்வி, இடைநிலை கல்வி அதிகாரங்கள்.

ஒத்தியங்கும் அதிகாரங்கள்

- ✓ சட்டங்களை விதித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் அதிகாரங்கள்
- ✓ சிவில் உரிமைகளை பாதுகாக்கும் அதிகாரங்கள்
- ✓ தேர்தல் நடாத்துதல், சுகாதார பாதுகாப்பு மற்றும் நலன்புரி அதிகாரங்கள்
- ✓ வரிவதிப்பு, சேகரிப்பு மற்றும் அறிவீடு செய்யும் அதிகாரங்கள்

4. நீதித்துறையின் மேலாண்மை

அமேரிக்காவில் இரு மட்டங்களிலான அரசாங்கம் காணப்படுவதால் மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்குமிடையில் அல்லது மாநிலங்களுக்கு மத்தியில் எழும் பிரச்சினைகளை விளங்கித் தீர்த்துவைக்க பக்கச்சார்பற்ற சுதந்திரமான நீதித்துறை அவசியமாகிறது. இதன்படி அமேரிக்காவில மத்திய நீதிமன்றமொன்று தாபிக்கப்பட்டுள்ளதுடன் அது அரசியலமைப்பின் பாதுகாவலானகவும், உரிமைகளின் பாதுகாவலானகவும் விளங்குகின்றது. மேலும் அரசியல் யாப்பிற்கு பொருள்கோடல் செய்வதும் இதுதான். அமேரிக்க உயர்நீதிமன்றமானது பல தடவைகள் மத்திய அரசுக்கு சார்பாகவும், மாநில அரசுகளுக்கு சார்பாகவும் தீர்ப்பு வழங்கியுள்ளது.

5. செனட் சபையில் சமபிரதிநிதித்துவம்

அமேரிக்கவில் மாநிலங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் செனட்சபையில் மாநிலத்துக்கு 2 பேர் என்ற விகிதத்தில் 50 மாநிலங்களிலிருந்தும் 100 பேர் அங்கம் வகிக்கின்றனர். இவர்கள் செனட்டர்கள் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் மாநில மக்களால் தெரிவு செய்யப்படுவார்கள். சமஷ்டியில் எல்லா மாநிலங்களுக்கும் சமமான கவனிப்பு என்ற தத்துவத்திற்கேற்ப இவ்வுறுப்பினர் தொகை அமையப்பெற்றுள்ளது.

அமேரிக்காவின் இரண்டாம் மன்றமான இச்செனட்சபை நிரந்தரமானது. இதன் பதவிக்காலம் 06 வருடங்களாகும். இரண்டு வருடத்திற்கு ஒரு முறை 1/3 பகுதியினர் பதவி முதிர்ச்சியடைய புதியவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். இதனை சுழற்சி முறைத்தெரிவு என அழைப்பர்.

6. உரிமைகள் அரசியலமைப்பினால் பாதுகாக்கப்படுதல்

அமேரிக்க அரசியலமைப்பில் மாநிலங்களிகளின் உரிமைகள் அரசியல் யாப்பு ரீதியாக பாதுகாக்கப்பட்டுள்ளது. அரசியல் யாப்பில் மாநிலங்கள் மத்திய அரசுக்கு விட்டுக்கொடுத்த அதிகாரங்களே குறிப்பிடப்பட்டுள்ளன. எஞ்சிய அதிகாரங்கள் அனைத்தும் மாநில அரசுகளிடமே காணப்படுகின்றது.

மாநில அரசுகள் மத்திய அரசுகளின் தலையீடின்றி இயங்க வழியமைக்கப்பட்டுள்ளது. மாநில ஆளுனர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். இந்தியாவைப்போல மத்திய அரசினால் நியமனம் செய்யப்படமாட்டார். மேலும் மாநில சட்டமன்றங்களை ஜனாதிபதி கலைக்க முடியாது. மாநிலங்களுக்கென நீதிமன்றங்கள் உண்டு. அதேபோன்று எல்லா மாநில அரசுகளும் தம்மக்களுக்கு குடியுரிமையை வழங்குகின்றது.

மேலுள்ளவற்றை தொகுத்து நோக்கும்போது அமேரிக்க மாநிலங்களுக்கு அதிகளவான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளமையினையும் மத்திய அரசின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளமையினையும் அவதானிக்கலாம். ஆனால் நடைமுறையில் மத்திய அரசே பலம்பெற்று விளங்குகிறது. அமேரிக்க அரசியலமைப்பில் மறைமுக அதிகாரங்கள் அல்லது தொக்கிநிற்கும் அதிகாரங்கள் என விளக்கமளிக்கப்பட்டு பல புதிய அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக்கொண்டது. மேலும் கிபன் ஒக்டன் வழக்குத்தீர்ப்பினூடாக பல புதிய அதிகாரங்கள் மத்திய அரசிடம் வந்து சேர்ந்துள்ளது. எது எவ்வாறாயினும் உலகில் காணப்படும் சிறந்த சமஷ்டிகளில் ஐக்கிய அமேரிக்கா பிரபல்யமானது என்பது உறுதியானதாகும்.

அமேரிக்க சமஷ்டியில் மத்திய மாநில அரசுகளுக்கிடையிலான தொடர்புகள்

ஐக்கிய அமேரிக்க அரசியலமைப்பில் அமேரிக்க ஒரு சமஷ்டி நாடு என குறிப்பிடப்படவில்லை. எனினும் அமேரிக்க ஒரு சமஷ்டி நாடாகும். அமேரிக்க அரசியலமைப்பில் காணப்படுகின்ற மத்திய மாநில அரசுகளுக்கிடையிலான அதிகாரப்பங்கீடு அது ஒரு சமஷ்டி நாடு என்பதை தெளிவாக உணர்த்தி விடுகின்றது. அதாவது அதிகாரப்பங்கீட்டு விடயத்தில் சாதாரண சட்டத்தின் மூலம் மத்திய அரசோ அல்லது மாநில அரசோ மாற்றங்களை ஏற்படுத்த முடியாது. எனவே அமேரிக்க ஒரு அதிகாரப்பங்கீட்டுடன் கூடிய சமஷ்டி நாடு என சொல்லலாம்.

அமேரிக்க அரசியலமைப்பில் மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இதற்கு புறம்பாக சில மறைமுக அதிகாரங்களையும் அமேரிக்க மத்திய அரசாங்கம் கொண்டுள்ளது. இங்கு மறைமுக அதிகாரங்கள் என்பது அரசியல் யாப்பு ரீதியாக மத்திய அரசிற்கு நேரடியாக வழங்கப்படாத அதிகாரங்களாகும்.

மதிய அரசிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் :

- தேசிய பாதுகாப்பு மற்றும் போர் தொடர்பான அதிகாரங்கள
- சர்வதேச மற்றும் மாநிலங்களுக்கிடையிலான வரத்தகம் தொடர்பான அதிகாரங்கள்
- வரி அறவிடுதல் மற்றும் செலவிடுதல் தொடர்பான அதிகாரங்கள்
- மத்திய அரசினால் ஒதுக்கப்படும் நிதியினூடாக மாநிலங்களை கட்டுப்படுத்தும் அதிகாரங்கள்
- புதிய மாநிலங்களை சேர்த்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளல் தொடர்பான அதிகாரங்கள்
- மத்திய மாநில அரசுகள் இணைந்து பயன்படுத்தும் ஒத்தியங்கும் அதிகாரங்கள்
- மாநில அரசுகளை பாதுகாத்தல் தொடர்பான அதிகாரங்கள்

தேசிய பாதுகாப்பு மற்றும் போர் தொடர்பான அதிகாரங்கள் : வெளிநாட்டு ஆக்கிரமிப்பு அல்லது சர்வதேச தீவிரவாதத்திலிருந்து நாட்டை பாதுகாத்துக்கொள்ளும் அதிகாரம் யாப்பு ரீதியாக மத்திய அரசாங்கத்திற்கே வழங்கப்பட்டுள்ளது. தீவிரவாத ஆக்கிரமிப்புக்களின் போது நாட்டை பாதுகாக்க யுத்தம் செய்யும் அதிகாரம் மத்திய அரசிற்கே உண்டு. இதன்போது மத்திய அரசு அவசியமானால் மாநிலங்களுக்கு சொந்தமான விமான நிலையங்களை கைப்பற்ற அல்லது பாவிக்க முடியும். இவ்வாறான பணியினை ஜனாதிபதி மேற்கொள்வதுடன் அதற்கு காங்கிரஸின் சம்மதமும் அவசியமாகும்.

சர்வதேச மற்றும் மாநிலங்களுக்கிடையிலான வரத்தகம் தொடர்பான அதிகாரங்கள்: அமேரிக்க அரசியலமைப்பின் மூலம் சர்வதேசம் மற்றும் மாநில அரசுகளுக்கிடையிலான வர்த்தகம் தொடர்பான முழு அதிகாரமும் மத்திய அரசிற்கு வழங்கப்பட்டுள்ளது.

உதாரணம் : ஒரு மாநிலத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்படாத வரத்தக நடவடிக்கைகள் தொடர்பாக மத்திய அரசு சட்டங்களை இயற்ற முடியும்.

மத்திய அரசிற்கு வழங்கப்பட்டுள்ள வர்த்தகம் தொடர்பான அதிகாரத்தின் கீழ் வெளிநாட்டவர்கள் மற்றும் இந்திய வர்த்தகர்களுக்கிடையில் வர்த்தகம் செய்வதற்கு சட்டத்தில் இடமுண்டு

நீதிமன்ற தீர்ப்பின் மூலமும் சில அதிகாரங்களை மத்திய அரசு பெற்றுள்ளது. (லொத்தர் சீட்டு, வானொலி ...)

வரி அறவிடுதல் மற்றும் செலவிடுதல் தொடர்பான அதிகாரங்கள் : அமேரிக்க காங்கிரஸ் தனித்து வரி அறவிடல் மற்றும் செலவிடல் அதிகாரத்தை அரசியலமைப்பு வழங்கவில்லை. எனினும் சந்தர்ப்ப சூழலுக்கேற்ப மத்திய அரசு வரி அறவிட , செலவிட முடியும். மேலும் மத்திய அரசாங்கத்தை போல மாநில அரசாங்கத்திற்கும் வரி அறவிடும் அதிகாரம் உண்டு என்பதை கிபன்ஸ் ஒக்டன் நியூயோர்க் வழக்குத்தீர்ப்பு மீளவலியுறுத்தியமையை குறிப்பிடலாம்.

மத்திய அரசினால் ஒதுக்கப்படும் நிதியினூடாக மாநிலங்களை கட்டுப்படுத்தும் அதிகாரங்கள் :

மத்திய அரசுக்கு கல்வி மற்றும் விவசாயம் தொடர்பாக நேரடித் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் இல்லாவிடினும் அவ்விடயபரப்புக்கள் தொடர்பாக மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யவும்

நன்கொடை வழங்கவும் முடியும். மேலும் நிபந்தனைகளுடன் கூடிய நிதியினை மத்திய அரசு மாநில அரசுகளுக்கு வழங்குவதன் மூலம் மறைமுகமாக மாநில அரசுகளின் செயற்பாடுகளில் தலையிடுவதற்றும் அதன்வாயிலாக அதிகாரம் செலுததுவதற்கும் மத்திய அரசுக்கு முடியுமாக உள்ளது.

மேலும் மத்திய அரசு நிதியினை ஒதுக்கும் போது அதை மாநில அரசுகள் எவ்வாறு செலவிட வேண்டும் என தீர்மானிக்க முடியும். மத்திய அரசு நிதியினைக் கட்டுப்படுத்திக்கொள்ளல், கட்டுப்படு:த்துவதற்கான அச்சுறுத்தலை விடுவிப்பதன் மூலம் மாநில அரசுகளையும் நபர்களினது செயற்பாடுகள் மீது கட்டுப்பாடுகளை விதிக்க மத்திய அரசினால் முடியுமாக உள்ளது.

உதாரணம் : மத்திய அரசு மாநில அரசுக்கு யாதேனும் செயற்திட்டத்திற்காக வழங்கப்படும் நிதியினை யாரேனும் நபருக்கு நிறம், இனம், பால் மற்றும் உடல் தகுதிகளில் ஏதேனும் ஒன்றை காரணம் கர்ட்டி மாநில அரசு மறுத்தால் வழங்கப்படும் நிதியுதவி நிறுத்தப்படும்.

மத்திய மாநில அரசுகள் இணைந்து செயற்படுத்தும் அதிகாரங்கள் : மத்திய அரசுகள் மாநில அரசுகள் இணைந்து செயற்படுத்தும் அதிகாரம் பற்றி அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை ஒத்தியங்கும் அதிகாரங்கள் என அழைக்கப்படுகின்றது.

உதாரணம்: வரி விதிப்பதற்கான அதிகாரம் மற்றும் அவ்வவ் மாநிலத்தின் உள்ளகச் செயற்பாடுகளில் செல்வாக்கு செலுத்தும் வியாபாரத்தை தீர்மானித்தல்

அமேரிக்க ஒத்தியங்கும் அதிகாரங்களை மத்திய அரசின் சட்டங்களோடு முரண்படாத வகையில் அவற்றினை மாநில அரசுகள் அனுபவிக்க வேண்டும். மேலும் அமேரிக்க மாநிலங்கள் மாநிலங்களுக்கிடையில் வியாபாரத்தின் அடிப்படையில் தேவையற்ற குறுக்கீடுகள் மற்றும் அழுத்தங்கள் ஏற்படும் விதத்தில் அரசாங்கத்தின் செயற்பாடுகளில் தலையிடும் வகையில் செயற்பட முடியாது.

உதாரணம் : ஒரே விதமான தேசிய சலுகை மாநிலங்களுக்கு இடையிலான வரத்தகம் என்பவற்றை மத்திய அரசின் சட்டத்துறையே தீர்மானிக்கும். அவை ஜனாதிபதியின் அனுமதி மற்றும் நீதிமன்றத்தின் கொள்கை என்பவற்றுக்கேற்ப வரையறுக்கப்பட்டுள்ளன.

***மாநில அரசுகளை பாதுகாத்தல் தொடர்பான அதிகாரங்கள்* :**

அமேரிக்க சமஷ்டி கட்டமைப்பில் மாநிலங்களை பாதுகாப்பது சம்மந்தமாக பல ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

உதாரணம் : ஐக்கிய அமேரிக்க மாநிலங்களில் உள்ளக கிளர்ச்சிகள் ஏற்படும்போது உரிய மாநிலத்தின் அதிகாரத்தாபனத்தால் விடுவிக்கப்படும் வேண்டுகோள்களுக்கிணங்க அமேரிக்க ஜனாதிபதி இராணுவத்தை அனுப்ப வேண்டும்.

எனவே மேற்குறிப்பிட்டுள்ள விடயங்களை தொகுத்து நோக்கும் போது அமேரிக்க சமஷ்டிமுறையில் மத்திய மாநில அரசுகளுக்கிடையிலான தொடர்புகளை அறிந்து கொள்ளலாம. ஏனினும் நடைமுறையில் மத்திய அரசின் அதிகாரமே வலுவடைந்து வருகின்றமையை அவதானிக்கலாம்.

அமேரிக்க சமஷ்டிமுறையில் மாநில அரசுகளுக்கிடையிலான தொடர்புகள்

அமேரிக்க சமஷ்டி முறையில் மத்திய மாநில அரசுகளுக்கிடையில் தொடர்புகள் நிலவி வருகின்றமையயை அவதானிக்கலாம்.

புதிய மாநிலங்களை இணைத்துக்கொள்வதற்கான அல்லது ஏற்றுக்கொள்ள மத்திய அரசின் காங்கிரஸிற்கே அதிகாரம் உள்ளது.

அமேரிக்க யாப்பின் 4ம் உறுப்புரையின் படி மாநில அரசொன்றிற்கு வேறொரு மாநில பிரஜை ஒருவரின் அடிப்படை உரிமைகள் தொடர்பில் விசேட சலுகை வழங்கவோ அல்லது வழங்காதிருப்பதற்கோ சட்டத்தில் காணப்படும் சலுகைகள் எதிர்பார்ப்புக்கள் என்பன தொடர்பான விடயங்களை மறைத்து செயலாற்ற முடியாது.

மேலும் மாநில அரசுகள் தமது பிரஜைகளுக்கு வழங்கும் சலுகைகளை ஏனைய மாநிலங்களின் பிரஜைகளுக்கு வழங்க வேண்டும். அதாவது சட்டபாதுகாப்பு சமாதான தொழில் ஒன்றில் ஈடுபடல், நீதி நிவாரணத்தை பெற்றுக்கொள்ளல் என்பதே இதன் அர்த்தமாகும்.

அரசியலமைப்பின் 14ம் உறுப்புரையின் 2ம் உப பிரிவின் படி குறிப்பிட்ட மாநிலம் ஒன்றில் குற்றம் சுமத்தப்பட்டு வேறொரு மாநிலத்திற்கு தப்பிச்செல்லும் ஒருவரை கைது செய்து அம்மாநிலத்தின் உரிய அதிகாரியிடம் ஒப்படைத்தல் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது யாதேனும் மாநிலமொன்று மற்றொறு மாநிலத்தின் குற்றவாளிக்கு பாதுகாப்பு வழங்கக்கூடிய இடமாக இருக்கக்கூடாது என்பதே இதன் பொருளாகும்.

மேலும் பூரணமான நம்பிக்கை எனும் நம்பிக்கை சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே மாநிலஅரசொன்று தொழிற்பட வேண்டும். மாநில அரசுகளின் சட்ட ஆவணங்கள், நீதிமன்ற செயன்முறைகள் தொடர்பில் நம்பிக்கை வைத்து கருமமாற்ற வேண்டும் என்பதே இதன் கருத்தாகும்.

அமேரிக்க அரசியல் யாப்பை திருத்தும் வழிமுறைகள்


அமேரிக்க அரசியலமைப்பானது பின்வரும் வழிமுறைகள் மூலம் திருத்தப்படுகிறது.

1. காங்கிரஸின் இரு சபைகளிலும் 2/3 பெரும்பான்மையினைப் பெற்றுக்கொள்வதோடு அது தொடர்பில் மாநில அரசுகளில் ¾ இன் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மாநில சட்டமன்றங்களின் மூலம் அல்லது இது தொடர்பில் நடாத்தப்படும் மாநாட்டின் மூலமோ அனுமதி வழங்க முடியும்.

2. மாநில அரசுகளும் அரசியலமைப்பு திருத்தங்களை ஆரம்பிக்க முடியும் மாநில அரசுகளின் 2/3 இற்கு அதிகமான எண்ணிக்கையினர் காங்கிரஸில் வேண்டுகோள் விடுக்கும் போது காங்கிரஸின் அரசியலமைப்பு உருவாக்க மாநாடு அழைக்கப்படும். பின்பு ¾ மாநில அரசுகள் அத்திருத்தத்தை அங்கீகரிக்க வேண்டும்.

அமேரிக்க காங்கிரசின் அமைவுச்சேர்க்கை, அதிகாரங்கள், பணிகள்

அமைவுச்சேர்க்கை



- இதன் உறுப்பினர்கள் தேர்தல் மூலம் மக்களால் தெரிவுசெய்யப்படுவார்கள்.
- இவர்களின் பதவிக்காலம் 2 வருடங்களாகும்
- இச்சபை தற்காலிகமானதாகும்.
- சபாநாயகர் இதற்கு தலைமை தாங்குவார்
-

- பிரதிநிதிகள் மாநில மக்களால் தெரிவாவர்
- பதவிக்காலம் 06 வருடங்களாகும்
- சபை நிரந்தரமானது
- சபைக்கு உப ஜனாதிபதி தலைமை தாங்குவார்

அதிகாரங்களும் பணிகளும்

மக்கள் பிரதிநிதிகள் சபை	செனட்சபை
வரவு செலவு திட்டத்தை ஆரம்பித்துவைத்தல்	நிதி மசோதாவிற்கு அங்கீகாரம் வழங்குதல். திருத்துவதற்கு அல்லது மாற்றுவதற்கு அதிகாரம் உண்டு.
குற்றப்பிரேரணையை ஆரம்பித்துவைத்தல்	குற்றப்பிரேரனையை விசாரணை செய்தலும் 2/3 பெரும்பான்மையினால் நிறைவேற்றலும்.
ஜனாதிபதியின் வெளிநாட்டு ஒப்பந்தத்தை தடுக்கும் அதிகாரம் இல்லை.	2/3 பெரும்பான்மையினால் வெளிநாட்டு ஒப்பந்தத்தை அங்கீகரித்தல் அல்லது தடை செய்யும் அதிகாரம் உண்டு
ஜனாதிபதியின் இராணுவ செயற்பாட்டுக்கு அனுமதி வழங்க வேண்டும்	ஜனாதிபதியின் இராணுவ செயற்பாட்டை தடைசெய்யும் அதிகாரம் உண்டு
ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரும் பெரும்பான்மை அனுமதி பெறாவிட்டால் ஜனாதிபதியை தெரிவு செய்யும் அதிகாரம் இச்சபைக்கு உண்டு	உப ஜனாதிபதி தேர்தலில் எந்தவொரு வேட்பாளரும் அறுதிப்பெரும்பான்மை பெறாவிடின் உப ஜனாதிபதியை தெரிவு செய்யும் அதிகாரம் இச்சபைக்கு உண்டு.
உயர் நீதிமன்ற நீதிபதிகள் உயர் அதிகாரிகள் நியமனங்களில் எந்த வித அதிகாரமுமில்லை	இப்பதவிகள் நியமனத்திற்கு செனட்டின் 2/3 பெரும்பான்மை வேண்டும்

அமேரிக்க ஜனாதிபதியின் தெரிவும் தேர்தல் கல்லூரியும்

ஐக்கிய அமேரிக்கா ஜனாதிபதி அரசாங்கமுறையை உடைய நாடாகும். இவர் மக்களினால் நேரடியாகவன்றி தேர்வாளர் கழகத்தினூடாக மறைமுகமாக தெரிவு செய்யப்படுகின்றார். இவரின் பதவிக்காலம் 04 வருடங்களாகும். ஒருவர் 02 தடவைகளுக்கு மேல் ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியாது. அமேரிக்க ஜனாதிபதி பதவி உலகிலே அதிக அதிகாரமுள்ள பதவியாக பாரக்கப்படுவதனால் இவரை தெரிவு செய்வதற்கான தெரிவுமுறையும் முறையும் சிக்கலானதும், நீண்டதும், செலவுமிக்கதுமாக அமைந்து விடுகின்றது.

ஜனாதிபதி வேட்பாளருக்குரிய தகைமைகள்.

- ❖ பிறப்பால் அமேரிக்க பிரஜையாக இருத்தல்
- ❖ 35 வயதை பூர்த்தியடைந்திருத்தல்
- ❖ 14 வருடங்கள் அமேரிக்காவில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்

அமேரிக்க ஜனாதிபதியை தெரிவு செய்யும் முறையானது பின்வரும் கட்டங்களின் அடிப்படையில் நடைபெறும்.

கட்டம் - 01

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் யாவரும் தம்மை மத்திய தேர்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்தல் வேண்டும். சுயேட்சை வேட்பாளர்கள் தம்மை நேரடியாக பதிவு செய்து கொள்ள முடியும். கட்சிகள் தமது வேட்பாளரை தமது தேசிய கட்சி மகாநாட்டில் தெரிவு செய்கின்றன. இது ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் வருடத்தின் ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதத்தில் இடம்பெறும்.

கட்டம் - 02 (தேர்வாளர் கழகம்)

அரசியலமைப்பின் படி ஜனாதிபதி மக்களினால் நேரடியாகவன்றி தேர்வாளர் கழகத்தினால் தெரிவு செய்யப்படுகின்றார். .இத்தேர்வாளர் கழகமானது காங்கிரஸின் இருசபைகளினதும் உறுப்பினர் தொகைக்கு சமனான எண்ணிக்கையை கொண்டிருக்கும். இதன்படி தேர்வாளர் கழக உறுப்பினர் தொகை மொத்தம் 538 ஆகும்.

தேர்வாளர் கழகத்தின் உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தலானது ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் வருடத்தின் நவம்பர் மாதத்தில் முதலாவது திங்கள் கிழமைக்கு பின்னர் வரும் முதலாவது செவ்வாய்க்கிழமை நடைபெரும்.

அமேரிக்காவில் வெற்றியாளர் சகல வாக்குகளையும் பெற்றுக் கொள்ளும் கொள்கை (winer Takes All) கடைபிடிக்கப்படுகின்றது. இதன்படி வெற்றிபெறுபவர் சகலதையும் பெற்றுக்கொள்வார் என்ற அடிப்பிடையில் மாகாணத்தில் வெற்றி பெறும் கட்சி சகலதையும் பெற்றுக் கொள்ளும்.

கட்டம் - 03

வெற்றிபெற்ற வேட்பாளர் யாவரும் டிசம்பர் மாதத்தில் இரண்டாம் புதன்கிழமை தத்தமது மாநிலங்களின் தலைநகரங்களில் கூடி ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு வாக்களிப்பர். பின்னர் அவை முத்திரை இடப்பட்டு வாசிங்டன் நகரிலுள்ள செனட்சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

வாசிங்டனுக்கு அனுப்பப்பட்ட அவ்வாக்குகள் ஜனாதிபதி 06 அல்லது 07ம் திகதி காங்கிரஸின் இரு சபைகளினது கூட்டுக் கூட்டமொன்றில் செனட்சபை தலைவரால் திறக்கப்பட்டு எண்ணப்படும்.. ஒருவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கு மொத்த வாக்குகளில் (538) அறுதிப்பெரும்பான்மையை (270) பெற வேண்டும்.

எவரும் அறுதிப்பெரும்பான்மையை பெறாதவிடத்து ஜனாதிபதியை தெரிவு செய்யும் பொறுப்பு மக்கள் பிரதிநிதிகள் சபைக்கும் உப ஜனாதிபதியை தெரிவு செய்யும் பொறுப்பு செனட் சபைக்கும் விடப்படும். இதன்படி ஒவ்வொரு மாகாணமும் ஒரு வாக்கினை பெற்றுக்கொள்ளும். அதில் யார் அறுதிப்பெரும்பான்மையை (26) பெறுகிறாரோ அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார்.

மேலுள்ளவற்றை தொகுத்து நோக்கும் போது ஜனாதிபதி தெரிவு முறையினையும் தேர்தல் கல்லூரியினது செயன்முறையினையும் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும். அதேநேரத்தில் ஜனாதிபதியை தெரிவு செய்யும் தேர்தல் முறையானது மரபுகளை அடிப்படையாகக் கொண்ட ஒன்று என்பதும் புலனாகிறது.

அமேரிக்க ஜனாதிபதியின் அதிகாரங்களும் பணிகளும்

அமேரிக்க ஜனாதிபதியின் சட்டத்துறை சார்ந்த அதிகாரங்களாவன :

- ✓ வருடாந்த அரசாங்க செய்திகளை காங்கிரஸில் சமர்ப்பித்தல் மற்றும் தேவை ஏற்படும் போது செய்திகளை அனுப்புதல்
- ✓ காங்கிரஸின் தவணைகளை முடிக்கும் போது மீண்டும் கூடும் தினத்தை உறுதிப்படுத்தல்
- ✓ காங்கிரஸ் இயற்றும் சட்டங்களுக்கு இறுதி அதிகாரத்தை வழங்குதல் அல்லது இரத்து அதிகாரத்தை பிரயோகித்தல்
- ✓ சட்டவாக்கம் செய்ய வேண்டிய கொள்கைகளை சிபாரிசு செய்தல்
- ✓ காங்கிரஸ் நிறைவேற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்

நிறைவேற்றுத்துறை அதிகாரங்களாவன :

- அரசின் தலைவர் என்ற வகையில்
  - தேசிய வீரர்களுக்கு விருது வழங்குதல்
  - தேசிய கிறிஸ்மஸ் மரத்தை ஒளிபெறச்செய்தல்
  - அமேரிக்க குடியரசையும், மாகாணங்களின் குடியரசையும் பாதுகாத்தல்
  - அமேரிக்க சொத்துக்களை பாதுகாத்தல்
  - தேசிய முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளை வெளியிடல்

- முப்படைகளின் தலைவர் ன்ற வகையில்

- அமேரிக்காவின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
- தேசிய சேவைகளுக்காக இராணுவத்தை அழைத்தல்
- முப்படை உயர் அதிகாரிகளை நியமித்தல்
- அமேரிக்க இராணுவ போர்க்கப்பல்கள், விமானங்கள தரித்து நிற்கும் இடத்தினை தீர்மானித்தல்

- பிரதான நிறைவேற்று அதிகாரி என்ற வகையில்

  - அரச கொள்கையினை தீர்மானித்தல்
  - நிறைவேற்று கட்டளையை பிறப்பித்தல்
  - வரவு செலவை கட்டுப்படுத்தல்
  - குற்றவாளிகளுக்கு மன்னிப்பளித்தல்
  - சமஷ்டி நிருவாகத்தை கொண்டு நடாத்துதல்

- வெளிநாட்டு விவகாரங்களை நிர்வகிப்பவர் என்ற வகையில்

  - அமேரிக்காவை வெளிநா'டகளில் பிரதிநிதித்துவப்படுத்தல்
  - வெளிநாட்டுக்கொள்கைகளை கொண்டு நடாத்துதலும் வெளிநாட்டு தூதுவர்களை வரவேற்று அங்கீகரித்தல் அல்லது நிராகரித்தல்
  - வெளநாட்டு அரசுகளை உத்தியோகபூர்வமாக அங்கீகரித்தல்
  - வெளிநாட்டு வரத்தகத்தை கட்டுப்படுத்தல்.

- செனட் சபையுடன் இணைந்து மேற்கொள்ளும் பணிகள் :

  கபினட் செயலாளர், இலாகாத் தலைவர்கள், உயர்நீதிமன்ற நீதிபதிகள், சமஷ்டி நீதிமன்ற நீதிபதிகள மற்றும் இராஜதந்திர அதிகாரிகள் போன்ற உயர் பதவி நியமனங்களை வழங்குதல், வெளிநாட்டு ஒப்பந்தங்களை 2/3 பெரும்பான்மை சம்மதத்துடன் மேற்கொள்ளுதல்.

நீதித்துறை தொடர்பான அதிகாரங்களாவன

- செனட் சபையின் சம்மதத்துடன் உயர் நீதிமன்ற, சமஷ்டி நீதிபதிகளை நியமித்தல்
- குற்றவாளிகளை மன்னித்தல் , தண்டணையை குறைத்தல்

(மாநிலங்களில் சட்டங்களை மீறியதற்காக தண்டணை பெற்றோரின் தண்டணையை குறைக்க அதிகாரமில்லை)

மேலுள்ளவற்றை தொகுத்து நோக்கும் போது ஜனாதிபதியின் அதிகாரங்களை பணிகளை தெளிவாக அடையாளம் கண்டு கொள்ள முடியும். இவ்வாறான அதிகாரங்களையும் பணிகளையும் பின்வரும் மூலாதாரங்களிலிருந்து பெறுகின்றார்.

- அமேரிக்க அரசியல் யாப்பு மூலம்
- அமேரிக்க காங்கிரஸினால் அங்கீகரிக்கப்பட்ட யோசனைகள் மூலம்
- அமேரிக்க உயர் நீதிமன்ற தீர்ப்பின் மூலம்
- மரபுகள் மற்றும் ஜனாதிபதியின் ஆளுமை போன்றவற்றின் மூலம்.

பகுதி 01 வினாக்கள்

1 – 07 வரையான வினாக்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று பொருத்தமற்றது. அக்கூற்றினை அடையாளம் கண்டு அதன் இலக்கத்தை எதிரே உள்ள அடைப்பினுள் இடுக.

1. அமேரிக்க அரசியலமைப்பின் பண்புகளாவன
   A. எழுதப்பட்ட, நெகிழா அரசியலமைப்பு
   B. சமஷ்டி இயல்பினை கொண்ட அரசியலமைப்பு
   C. பாராளுமன்ற இறைமையை கொண்ட அரசியலமைப்பு
   D. சமஷ்டிவாதத்தை கொண்ட அரசியலமைப்பு
   E. நீதிப்புணராய்வு அதிகாரம் கொண்ட அரசியலமைப்பு (.....)

2. அமேரிக்க சமஸ்டி முறையின் பண்புகளாவன
   A. அரசியலமைப்பு மேலாண்மை தன்மையை கொண்டிருத்தல்
   B. எழுதப்பட்ட, நெகிழா அரசியலமைப்பு
   C. சமபிரதிநிதித்துவமற்ற இரண்டாம் மன்றம் காணப்படல்
   D. இரட்டைக் குடியுரிமை அங்கீகரிக்கப்பட்டிருத்தல்
   E. மனித உரிமைகள் அரசியலமைப்பினால் பாதுகாக்கப்படல் (.....)

3. அமேரிக்க மத்திய அரசிற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களாவன
   A. வெளியுறவு அதிகாரங்கள்
   B. நாணயவெளியீட்டு அதிகாரங்கள்
   C. வரி அறவிடுதல் மற்றும் செலவிடுதல் தொடர்பான அதிகாரங்கள்
   D .உள்ளூராட்சி மன்ற அதிகாரங்கள்
   E. நிதி விவகாரம் மற்றும் உள்நாட்டு பெருந்தெருக்கல் தொடர்பான அதிகாரங்கள் (.....)

4. அமேரிக்க மாநில அரசுக்கு உரித்தான அதிகாரங்கள்
   A. கடன் பத்திரங்களை வழங்கும் அதிகாரங்கள்
   B . உள்ளூராட்சி மன்ற அதிகாரங்கள்
   C. இடைநிலைக்கல்வி தொடர்பான அதிகாரங்கள்
   D. மாநில பொலிஸ் நடவடிக்கை தொடர்பான அதிகாரங்கள்
   E .மாநில விவசாய விஸ்தரிப்பு தொடர்பான அதிகாரங்கள் (.....)

5. அமேரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபையானது

A. தற்காலிக சபையாகும்

B. காங்கிரஸின் இரு மன்றங்களில் ஒன்றாகும்

C. இரண்டு வருட பதவி காலத்தை உடையது

D. இதன் பிரதிநிதிகள் மாநில மக்களால் தெரிவு செய்யப்படுவர்.

E .சபாநாயகர் தலைமையை ஏற்றுக்கொண்டுள்ளது. (.....)

6. அமேரிக்க செனற்சபையானது

A. உலகிலுள்ள செனற்சபைகளுள் தலையானது

B. ஒரு நிரந்தரமான சபையாகும்

C. ஆறு வருட பதவி காலத்தை உடையது

D. இதன் உறுப்பினர்கள் உப ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவர்

E. சகல மாநிலங்களுக்கும் சமமான கவனிப்பு என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது (.....)

7. அமேரிக்க ஜனாதிபதியானவர்

A.அமேரிக்க காங்கிரஸை கூட்ட முடியாது

B.அமேரிக்க காங்கிரஸை கலைக்க முடியாது

C.அமேரிக்க காங்கிரஸிற்கு செல்ல முடியாது

D.அமேரிக்க காங்கிரஸில் உரையாற்ற முடியாது

E.அமேரிக்க காங்கிரஸிற்கு செய்திகளை அனுப்ப முடியாது (.....)

8.

சுருக்க வினாக்கள்.

01. அமேரிக்க அரசாங்க முறையின் கீழ் காங்கிரஸானது இரு மன்றங்களை கொண்டிருக்கின்றது. அவற்றின் பெயரை குறிப்பிடுக?

....

02. அமேரிக்க மக்கள் பிரதிநிதிகள் அமைவுச்சேர்க்கையை குறிப்பிடுக? அச்சபையின் பதவிக்காலத்தையும் தருக?

....

03. அமேரிக்க செனட் சபையின் அமைவுச்சேர்க்கையை குறிப்பிடுக? அதன் பதவிக்காலத்தையும் தருக?

....

04. பிரித்தானிய காலணித்துவத்தின் கீழ் கீழிருந்த அமேரிக்க குடியேற்றங்களின் எண்ணிக்கை யாது? அக்குடியேற்றங்கள் சுதந்திர பிரகடனத்தை வெளியிட்ட ஆண்டு யாது?

....

05. அமேரிக்க அரசியல் யாப்பிற்கு கொண்டு வரப்படும் எந்தவொரு திருத்தத்திற்கும் மத்திய மாநில அரசுகளின் விசேட பெரும்பான்மை அவசியமாகும். அவ்விரு அரசுகளின் விஷெசெட பெரும்பான்மையினை முறையே குறிபபிடுக?

....

06. அமேரிக்காவின் அரம்பகால மாநில அரசுகளின் எண்ணிக்கையையும் தற்போதைய மாநில அரசுகளின் எண்ணிக்கையையும் முறையே குறிப்பிடுக?

....

07. அமேரிக்க யாப்பு அதிகாரப் பங்கீட்டுத்தன்மை அடிப்படையில் மத்திய அரசுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் இரண்டிணை குறிப்பிடுக?

.....
.....

08. அமேரிக்க யாப்பு அதிகார பங்கீட்டுத்தன்மை அடிப்படையில் மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் இரண்டினைத் தருக?

.....
.....

09. அமேரிக்க யாப்பு அதிகார பங்கீட்டுத்தன்மை அடிப்படையில் ஒத்தியங்கும் அதிகார பட்டியலில் இடம்பெறும் இரு அதிகாரங்களை குறிப்பிடுக?

.....
.....
..

10. ‘அமேரிக்க அரசியலமைப்பு மூலமாக மத்திய அரசிற்கு வழங்கப்படாத அதிகாரங்கள் உண்டு.’ அவ்வதிகாரதிதின் பெயரையும் அதன் மறு பெயரினையும் குறிப்பிடுக?

…… ……

11. உலகில் தலைசிறந்த இரண்டாம் மன்றமாக அமேரிக்க செனட் சபை சிறப்பிக்கப்படுவதற்கான இரண்டு காரணங்களை குறிப்பிடுக?

…….. ……

12. அமேரிக்க அரசியல் அமைப்பின் முதல் 10 அத்தியாயங்களும் அமேரிக்க மக்களின் உரிமைகள் பற்றி குறிப்பிடுகின்றது. அவ் உரிமைகளில் இரண்டினைக் குறிப்பிடுக?

…… ……..